இனிமையான குழந்தைகளே! சிவபாபா இந்த நேரத்தில் உங்கள் முன்பாக ஆஜராகியிருக்கின்றார், நமக்கு படிப்பு கற்பிக்கக் கூடியவர் எந்த தேகதாரியும் அல்ல, சுயம் சிவபாபா என்ற நம்பிக்கை முதலில் உங்களிடம் இருக்க வேண்டும்.

கேள்வி: தந்தையிடம் எந்த மாதிரியான கேள்வி கேட்பதும் கூட தந்தையை அவமதிப்பது போன்றதாகும்?

பதில்: குழந்தைகள் தந்தையிடம் கேட்கின்றனர் லி பாபா! நீங்கள் இன்னும் எவ்வளவு காலம் இந்த சரீரத்தில் வருவீர்கள்? அல்லது விநாசம் எப்போது ஏற்படும்? இது என்னை நிந்தனை செய்வதாகும் என்று பாபா கூறுகின்றார். விருந்தாளியிடம் நீங்கள் இன்னும் எத்தனை நாட்கள் இருப்பீர்கள்? என்று கேட்பது போன்ற தாகும். இது நிந்தனை ஆகி விடுகிறது அல்லவா! நான் உங்களுக்கு சுமை யாக இருக்கிறேனா என்ன? என்று கேட்பார். சிவபாபா எதுவரை இங்கு இருப்பாரோ அதுவரை குழந்தைகளாகிய நீங்கள் குஷியாக இருப்பீர்கள் தானே! ஆகையால் இந்த கேள்வியை தந்தை யிடம் கேட்கக் கூடாது.

ஓம்சாந்தி. தந்தை அமர்ந்து பிரம்மாவின் மூலம் தனது குழந்தைகளுக்கு, பிரம்மா குமார் மற்றும் பிரம்மா குமாரிகளுக்குப் புரிய வைத்துக் கொண்டிருக்கின்றார். தந்தை நிராகாரராக இருக்கின்றார். யாருக்காவது சாட்சாத்காரம் ஏற்படுத்த வேண்மெனில் பிரம்மாவின் சரீரத்தை தான் எதிரில் காண்பிப்பேன். ஒருவேளை சுயத்தின் சாட்சாத்காரம் செய்வித்தேன் எனில் யாரும் புரிந்து கொள்ள முடியாது. அவர் ஒரு பிந்துவாக இருக்கின்றார். ஆத்மா எவ்வாறு நட்சத்திரம் போன்று இருக் கிறதோ, அதே போன்று பரமாத்மாவும் பிந்துவாக இருக்கின்றார். இதை புத்தியினால் புரிந்துக் கொள்ள வேண்டும். சாட்சாத்காரமும் ஏற்படலாம், அதே பொருளைத் (பிந்துவை) தான் பார்ப்பீர்கள், வேறு எந்த பொருள் இருக்க முடியும்! இவரிடம் செல்லுங்கள் என்று பலருக்கு பிரம்மாவின் சாட்சாத்காரம் தான் செய்விக்கின்றேன். சிறிய பொருளை யாரும் புரிந்துக் கொள்ள முடியாது. பிரம்மாவின் மூலம் தந்தை அமர்ந்து புரிய வைக்கின்றார், ஞானம் கொடுக்கின்றார். குழந்தைகளே! நான் இந்த சாதாரண மனித உடலை ஆதாரமாக எடுக்கிறேன் என்று கூறுகின்றார். பிரம்மா பிரபல மானவர். பாபா இவரிடத்தில் இருக்கின்றார் என்பதை புரிந்து கொள்வீர்கள். இது பாபாவின் ரதமாகும். பாபா இல்லையெனில் இந்த பிரம்மாவும் ஒன்றுமில்லை. எனில் இந்த பி.குலிகளும் ஒன்றுமில்லை. குழந்தைகளுக்கு ஞானம் கிடைக்கிறது. இந்த ஞானம் பரம்பிதா பரமாத்மாவைத் தவிர வேறு யாரும் கொடுக்க முடியாது என்பதை நீங்கள் புரிந்திருக்கிறீர்கள். ஞானம் நிறைந்தவர் அந்த நிராகாரமானவர். இந்திரியங்களின்றி எப்படி ஞானம் கொடுக்க முடியும்? இந்த நேரத்தில் பாபா எதிரில் இருக் கின்றார் என்ற நம்பிக்கை குழந்தைகளுக்கு ஏற்பட வேண்டும். பாபா இவரிடத் தில் பிரவேச மாகியிருக்கின்றார், அமர்ந்து ஞானம் கொடுக்கின்றார் என்று புத்தி கூறுகிறது. அந்த பரம்பிதா பரமாத்மாவை இன்றி சொர்க்கத்தின் ஆஸ்தி அடைய முடியாது.

பக்தி மார்க்கத்தில் என்னவெல்லாம் விழா கொண்டாடுகின்றார்களோ அவை அனைத்தும் இந்த நேரத்திற்கான நினைவுச் சின்னமாகும் என்பதை

குழந்தைகளாகிய நீங்கள் அறிவீர்கள். சிவ ஜெயந்தியும் இந்த நேரத்திற்கான நினைவுச் சின்னமாகும். திரிமூர்த்தி சிவன் பரம்பிதா பரமாத்மா பிரம்மாவின் மூலம் ஸ்தாபனை செய்கின்றார். கிருஷ்ணர் புது உலகை ஸ்தாபனை செய்வது கிடையாது. பிராமண குலம் சென்று விடுகிறது. பிராமணர்கள் தான் தேவதைகளாக ஆகிவிடு கின்றனர் என்பது அவர்களுக்குத் தெரியாது. பிரம்மாவின் குழந்தைகள் நீங்கள் பிராமணர்கள் ஆவீர்கள். அனைத்து மனிதர்களுக்கும், அனைத்து தர்மத்தினர்களும் பிரம்மா நமது கிரேட் கிரேட் கிரான்ட் தந்தை என்பதை புரிந்து கொள்கின்றனர். அவரை ஆதாம், பீபீ அதாவது ஆதி தேவன், ஆதி தேவி என்று கூறு கின்றனர். அவரும் சிவபாபாவின் படைப் பாகும். பாபா படைப்புகளை எப்படி படைத்தார்? தத்தெடுக்கின்றார். இது முதல் நம்பருக்கான விசயமாகும். தந்தைக்குப் பிறகு ஆஸ்தி. இந்த விசயங்களை யார் நல்ல முறையில் புரிந்து கொள்கிறார்களோ அவர்களே உயர்ந்த பதவி அடைவார்கள்.

மனிதர்கள் எவ்வளவு காரிருளில் இருக்கின்றனர்! என்பதை இப்போது குழந்தை களாகிய நீங்கள் புரிந்திருக்கிறீர்கள். கல்பத்திற்கு முன்பும் தீ பற்றி எரியும் போது தான் விழிப்படைந்தனர். அந்த காட்சி மீண்டும் நடைபெறும். அவசியம் ஏற்பட்டே ஆக வேண்டும். மற்ற தர்மத்தினர்கள் இந்த விசயங்களைப் புரிந்துக் கொள்ளமாட்டார்கள், முயற்சியும் செய்யமாட்டார்கள். சத்யுகத்தில் இவ்வளவு மனிதர்கள் வர முடியாது. அங்கு மிகக் குறைவாக இருப்பார்கள், அவர்களே சூரிய வம்சத்தை இராஜ்யம் செய்வார்கள். அனை வரும் நாடகம் என்ற பந்தனத்தில் கட்டுப் பட்டு இருக்கின்றனர். நானும் நாடகத்தின் பந்தனத்தில் கட்டப்பட்டு இருக்கிறேன் என்று சுயம் தந்தை கூறுகின்றார். ஏதாவது விசயத்திற்கான பதில் நாடகத்தில் இருந்தால் கூறுவேன். நாடகத்தின் அனைத்து ரகசியங்களையும் இப்போதே கூறிவிடமாட்டேன். என்னிடத்திலும் நடிப்பின் பாகம் பதிவாகி யிருக்கிறது. அவ்வப்போது வெளிப்படும் போது உங்களுக்குப் புரிய வைத்துக் கொண்டே செல்வேன். அனைத்தும் நாடகப்படி தான் நடைபெறுகிறது. இதில் வித்தியாசம் ஏற்பட முடியாது. நாடகத்தில் இல்லையெனில் பதில் கொடுக்கமாட்டேன். இன்னும் இவ்வளவு காலம் இருக்கிறது என்று இப்போது கூறிவிடுவேன் என்பது கிடையாது. பாபா! எவ்வளவு காலம் இந்த சரீரத்தில் பயணம் செய்வீர்கள்? என்று பாபாவிடம் கேட்கின்றனர். கூற மாட்டேன். நாடகத்தில் இல்லை யெனில் என்ன செய்ய முடியும்! நாடகத்தில் இருந்தால் கூறுவேன். குழந்தைகளாகிய உங்களுக்கு கற்பிப்பதற்காகவே நான் வந்திருக்கிறேன். நான் உங்களது தந்தையாகவும் இருக்கிறேன். நீங்கள் தான் தாயாக, தந்தையாக...... என்று நீங்கள் பாடுகிறீர்கள். அதே பாகத்தை நடித்துக் கொண்டிருக் கிறேன். உங்களுக்கு கல்வி கொடுப்பது எனது கடமையாகும். என்னை ஞானக்கடல் என்றும், மனித சிருஷ்டியின் விதை என்றும் கூறுகிறீர்கள். சைத்தன்ய விதை எனில் அனைத்தையும் கூறுவார் அல்லவா! இந்த மரம் ஆலமரத்தினுடைய உதாரணம் கொடுக்கப்படுகிறது. தேவி தேவதா தர்மம் இப்போது இல்லை என்பதை நீங்கள் பார்க்கிறீர்கள். மற்ற அனைத்து தர்மங்களும் உள்ளன. இப்போது இந்த அனைத்தும் அழிந்து விடும். பிறகு தனது நேரத்தில் வந்து ஸ்தாபனை செய்வார் கள். நான் தேவதா தர்மத்தை ஸ்தாபனை செய்து கொண்டிருக்கிறேன். அந்த தர்மம் மறைந்து விட்டதால், நினைவுச் சின்னங்கள் (சித்திரங்கள்) உள்ளன. ஆனால் தேவி தேவதா தர்மம் எப்போது இருந்தது? எப்போது மறைந்து போனது? என்பது யாருக்கும் தெரியாது.

லெட்சுமிலிநாராயணன் இராஜ்யம் இருந்தது என்று மட்டும் கூறுவர். துவாபரத்தில் கிருஷ்ணர் வந்தார், கீதை கூறினார், அவ்வளவு தான். இந்த சாஸ்திரங்கள் அனைத்தும் பக்திக்காக. துவாபரத்தில் அமர்ந்து இந்த சாஸ்திரம் போன்றவைகளை உருவாக்குவர். சத்திய கண்டத்தில் தேவதைகள் மட்டுமே இராஜ்யம் செய்தனர். இதுவோ பொய்யான கண்டம். அங்கு எந்த பாவமும் ஏற்படுவது கிடையாது. இப்போது தந்தை உங்களை புண்ணிய ஆத்மாவாக ஆக்கிக் கொண்டிருக்கின்றார். நாடகத்தில் பதிவாகியிருக் கிறது. இராவண இராஜ்யத்தில் பக்தி, சாஸ்திரம் போன்றவைகள் ஆரம்பமாகிறது. இது அழிவற்ற நாடகம், ஏற்கெனவே உருவாக்கப்பட்டது. இதுவோ பொய்யான உலகம். ஈஸ்வரனைப் பற்றியும் பொய் தான் கூறுகின்றனர். ஈஸ்வரன் உயர்ந்ததிலும் உயர்ந்தவர் ஆவார், நாம் அவரை சந்திக்க விரும்புகிறோம் எனில் அவசியம் அவரிடமிருந்து ஏதோ கிடைக்கிறது. தந்தையிடமிருந்து என்ன கிடைக்கும்? அவர் அனைவருக்கும் சத்கதி கொடுக்கும் வள்ளல் ஆவார். அனைவரையும் துக்கத்திலிருந்து விடுவிக்கின்றார். இராவணனும் மிகவும் பலசாலியாக இருக்கிறது. அரைக் கல்பம் இராவணன் இராஜ்யம் நடைபெறுகிறது. ஆனால் அது துக்கம் கொடுக்கிறது, அதனால் தான் அனைத்து மனிதர்களும் தந்தையை நினைவு செய்கின்றனர். இராவணன் உங்களது முழு இராஜ்யத்தையும் அபகரித்து விடுகிறான், அந்த அளவிற்கு பலமுடையதாக இருக்கிறது. தந்தை நமக்கு ஆஸ்தி கொடுக்கின்றார், இராவணன் சாபம் கொடுக்கிறது என்பது இப்போது நீங்கள் அறிந்து கொண்டீர்கள். தந்தை எப்போது ஆஸ்தி கொடுக்கின்றார்? என்பது மனிதர்களுக்குத் தெரியாது. கீதைக்கு கிருஷ்ணரின் பெயர் போட்டு விட்டதால் கீதையை பொய்யானதாக ஆக்கி விட்டனர். இது மிகப் பெரிய தவறாகும். இந்த பாபாவும் நாராயணனின் பக்கா பக்தனாக இருந்தார், கீதை படித்து வந்தார். கீதை படிக்காமல் எந்த காரியமும் செய்யாதிருந்தார். எப்போது சாட்சாத்காரம் ஏற்பட்டதோ அப்போது இது பொய்யான கீதை என்பதை புரிந்து கொண்டார், முற்றிலுமாக விட்டு விட்டார். தந்தை நமக்கு இந்த (லெட்சுமிலிநாராயணன்) ஆஸ்தி கொடுக்கின்றார். இப்போது நிறைய புரிந்து கொண்டோம், சிவபாபா புரிய வைத்துக் கொண்டே இருக்கின்றார். ஒருபோதும் எந்த சாஸ்திரத்தையும் பயன்படுத்தவில்லை. பாபா கூறிக் கொண்டிருக்கின்றார். நான் கேட்டுக் கொண்டிருக்கிறேன் என்று இவரும் (பிரம்மா பாபா) கூறுகின்றார். பாபா இல்லையெனில் சில நேரங்களில் இவரும் கூறுகின்றார். இவரிடத்தில் பாபா இருக்கின்றார், ஆகையால் பிரம்மா விற்கு அந்த அளவிற்கு பெயர் கிடையாது. அஜ்மீரில் ஒரு கோயில் கட்டினர், ஆனால் எதையும் புரிந்து கொள்வது கிடையாது. கிருஷ்ணரிடம் புல்லாங்குழல் கொடுத்திருக்கின்றனர் மற்றும் சரஸ்வதிக்கு வீணை கொடுத்திருக்கின்றனர். சரஸ்வதி கல்விக் கடவுள் (தேவி) என்று கூறப்படுகின்றார். கல்விக் கடவுள் (தேவர்களில்) பிரம்மாவிற்குப் பதிலாக கிருஷ்ணரைக் கூறிவிட்டனர். குழப்ப மடைந்து விட்டனர்.

திரிமூர்த்தியில் கிருஷ்ணர் கிடையாது என்பதை தந்தை அமர்ந்து குழந்தைகளுக்குப் புரிய வைக்கின்றார். இருக்கிறார், ஆனால் குப்தமாக இருக்கிறார். இராதைலிகிருஷ்ணர் தான் லெட்சுமி-நாராயணனாக ஆகின்றனர், பரம்பிதா பரமாத்மா புரிய வைத்திருந்தார் என்பதும் யாருக்கும் தெரியாது. இப்போதும் புரிய வைத்துக் கொண்டிருக்கின்றார். இராதைலிகிருஷ்ணர் போன்றவர் களும் இந்த விசயத்தைப் புரிந்துக் கொண்டால் இங்கு அனைவரின்

கூட்டமும் கூடி விடும். ஆனால் நாடகத்தில் இவ்வாறு கிடையாது. நான் சங்கமத்தில் வந்து இராஜ யோகம் கற்பிக்கிறேன் என்று தந்தை கூறுகின்றார். யார் தேர்ச்சி பெறுகிறார்களோ அவர்கள் சூரிய வம்சத்தினர்களாக ஆகின்றனர், யார் தோல்வியடைகிறார்களோ அவர்கள் சந்திர வம்சிகளாக ஆகின்றனர். சூரிய வம்சத்தினர்களின் பிரஜைகள் சூரியவம்சிகளாக, சந்திர வம்சிகளின் பிரஜைகள் சந்திரவம்சிகளாக இருப்பர். குழந்தைகளாகிய உங்களது புத்தியில் முழு சக்கரத்தின் ஞானம் இருக்கிறது. நீங்கள் சுயதரிசன சக்கரதாரி பிராமணர்கள். இது சர்வ உத்தமமான பிராமண குலம் ஆகும். நீங்கள் சேவாதாரிகளாக இருக்கிறீர்கள். நீங்கள் குப்த வேடத்தில் பாரதத்தை யோக பலத்தின் மூலம் சொர்க்கமாக ஆக்குகிறீர்கள். உங்களுக்காக அவசியம் சொர்க்கம் தேவை. பழைய உலகை அழித்து விட வேண்டும். ஸ்ரீமத் மூலம் நீங்கள் தங்களது இராஜ்யத்தை ஸ்தாபனை செய்து கொண்டிருக் கிறீர்கள். யாதவர்களின் இராஜ்யம் அழிய வேண்டும். பாண்டவர்கள் புது உலக இராஜ்யத்தை ஸ்தாபனை செய்து கொண்டிருக்கிறீர்கள். பழைய வைக்கோல் போர் நெருப்பு பற்றிக் கொள்ளும். பாக்கி எத்தனை நாட்கள் இருக்கும்? என்பதை புரிந்திருக்கிறீர்களா? மிக குறுகிய காலமாகும். இன்னும் எவ்வளவு காலம் இருக்கிறது? இதை நாம் கேட்க முடியாது. நீங்கள் எவ்வளவு நாட்கள் இருப்பீர்கள்? என்று விருந்தாளியிடம் கேட்கமாட்டார்கள். நான் சுமையாக இருக்கிறேனா? என்று கேட்பார்கள். நான் இங்கு இருப்பதால் நீங்கள் குஷியாக இருக்கிறீர்கள் தானே! என்று சிவபாபா கேட்கின்றார். பிறகு ஏன் எவ்வளவு காலம் வருவீர்கள்? என்று கேட்கிறீர்கள். இவ்வாறு கேட்பதும் கூட நிந்திப்பதாகும், இதில் வெட்கப்பட வேண்டும். பாபா சீக்கிரம் சென்றால் நல்லது என்பதாக இருக்கிறது. ஆகையால் இப்படிப்பட்ட கேள்விகள் பாபாவிடம் கேட்கவே முடியாது. இப்படிப்பட்ட தந்தை வேறு யாரும் இருக்க முடியாது. குழந்தைகள் தந்தையை அறிந்து கொண்டீர்கள். இவரிடத் தில் பரமாத்மா இருக்கின்றார் என்று கிருஷ்ணருக்கு கூற முடியாது. கிருஷ்ணரின் நினைவு தான் வந்து கொண்டிருக்கும். பரமாத்மாவின் நினைவு வர முடியாது. கிருஷ்ணரைத் தான் பார்த்துக் கொண்டிருப்பர். சிவனை நினைக்கவே மாட்டார் கள். அதனால் தான் குழந்தைகளாகிய உங்களுக்கு சிவபாபாவை நினைவு செய்யுங்கள் என்று கூறப்படுகிறது. தேக அபிமானத்தில் இருக்கக் கூடாது. ஸ்ரீகிருஷ்ணரின் மகிமை ஒன்றும் குறைந்தது கிடையாது.

நான் மாற்றான் தேசத்தில் மாற்றான் சரீரத்தில் தான் வர வேண்டியிருக்கிறது என்று தந்தை கூறுகின்றார். ஸ்ரீகிருஷ்ணர் இராவணனின் தேசத்திற்கு வர முடியாது. ஸ்ரீகிருஷ்ணரின் ஆத்மா மறுபிறவி எடுத்து எடுத்து இப்போது இந்த சரீரத்தில் இருக்கிறது என்பதை இப்போது நீங்கள் அறிவீர்கள். இது கடைசி சரீரமாகும். இதுவே பிறகு நம்பர் ஒன் தூய்மை யான சரீரமாக ஆகிறது. இந்த அனைத்து விசயங்களும் வேறு யாருடைய புத்தியிலும் வர முடியாது. இராவணனின் சித்திரத்தை உருவாக்குகின்றனர், ஆனால் இராவணன் எப்போது பிரவேசமானது என்பதை புரிந்து கொள்வது கிடையாது. எரித்துக் கொண்டு வருகின்றனர். இறந்து விட்டால் பிறகு எரிப்பதை நிறுத்த வேண்டும், இறப்பது கிடையாது. ஒவ்வொரு ஆண்டும் எரிக்கின்றனர். இவை அனைத்தும் பக்தி மார்க்கமாகும். நான் உங்களை சூரிய வம்சிகளாக, சந்திரவம்சிகளாக ஆக்கியிருந்தேன் என்று தந்தை கூறுகின்றார். நீங்கள் பிறகு சூத்ரவம்சிகளாக எப்படி ஆனீர்கள்? இப்போது மீண்டும் சூரியவம்சி, சந்திர வம்சிகளாக ஆக்கிக்

கொண்டிருக்கிறேன். நாம் உலகின் மீது வெற்றியடை கிறோம், பிறகு தோல்வியடைவோம் என்பதை நீங்கள் இப்போது அறிவீர்கள். எப்போது தேவி தேவதா தர்மம் இருந்ததோ, அப்போது வேறு எந்த தர்மும் கிடையாது. இப்போது மீண்டும் அந்த தர்மம் ஸ்தாபனை ஆகின்ற போது மற்ற அனைத்து தர்மங்களும் அழிந்து விடும். அறிகுறி களையும் நீங்கள் பார்ப்பீர்கள். அறிவியலின் காரியங்கள் எவ்வளவு நடைபெற்றுக் கொண்டி ருக்கிறது! மகிழ்ச்சியும் கொண்டாடுகின்றனர். 3லி4 மணி நேரத்தில் இலண்டன் செல்லும் விமானமும் வெளிப்படும். இன்றைய நாட்களில் விமானத்தில் யானை, குரங்கு, தவளை அனைத்தும் செல்கின்றன. இது சுகத்திற்காகவும் இருக்கிறது, துக்கத்திற்காகவும் இருக்கிறது. அங்கு (புஷ்ப) விமானத்தில் சுற்றி வருவார்கள். இப்போது நீங்கள் உயர்ந்த அதிர்ஷ்டத்தை உருவாக்குவதற்காக வந்திருக்கிறீர்கள். நீங்கள் தேவி தேவதை களாக ஆகிக் கொண்டிருக்கிறீர்கள். சொர்க்கத்தின் பெயரை கூறுகின்றனர், ஆனால் சொர்க்கம் எப்போது இருந்தது? என்பதை அறிந்திருக்கவில்லை. சொர்க்கத்திற்கு சென்றதாக கூறு கின்றனர், ஆக அவசியம் நரகத்தில் இருந்திருக்கிறார். ஆனால் நீங்கள் நரகவாசிகள் என்று நேரடியாக கூறினால் கோபப்படுவார்கள். இப்போது உங்களிடம் சக்தி இருக்கிறது. நீங்கள் பதீத பாவனனை அழைக்கிறீர்கள் எனில் அவசியம் தூய்மையின்றி இருக்கிறீர்கள் என்று நீங்கள் கூற முடியும். இந்த மரம் இற்று போன நிலையில் இருக்கிறது என்று தந்தை கூறு கின்றார். மகாபாரத யுத்தம் பிரபலமானது. இராஜ்யம் அடைவதற்காக நாம் வந்திருக்கிறோம் என்பதை நீங்கள் அறிவீர்கள். நாம் ஸ்தாபனைக்கு நிமித்தமாக இருக்கிறோம். நாளடைவில் இந்த சந்நியாசிகள், மகாத்மாக்களும் உங்களது விசயங் களை ஏற்றுக் கொள்வார்கள், இவை அனைத்தும் நாடகத்தில் பதிவாகியிருக்கிறது. நல்லது.

இனிமையிலும் இனிமையான, தேடிக் கண்டெடுக்கப்பட்ட செல்லமான குழந்தைகளுக்கு, தாய் தந்தையாகிய பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் காலை வணக்கம். ஆன்மீகக் குழந்தைகளுக்கு ஆன்மீகத் தந்தையின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்தே.

தாரணைக்கான முக்கிய சாரம்:

1) குப்த ரூபத்தில் யோக பலத்தின் மூலம் பாரதத்தை சொர்க்கமாக்கும் சேவை செய்ய வேண்டும், ஆன்மீக சேவாதாரி ஆக வேண்டும்.

2) நமது குலம் சர்வ உத்தமமான பிராமண குலமாகும், நாம் சுயதரிசன சக்கரதாரிகள் என்ற போதையில் இருக்க வேண்டும். எந்த விசயத்திலும் சந்தேகம் எழக் கூடாது.

வரதானம் : பரமாத்மாவின் சிந்தனையின் ஆதாரத்தில் சதா கவலையற்றவராக இருக்கக்கூடிய நம்பிக்கை புத்தியுடையவர், கவலையற்றவர் ஆகுக.

உலகத்தினருக்கு ஒவ்வொரு அடியிலும் கவலையிருக்கிறது, மேலும் குழந்தைகளாகிய உங்களுக்கு ஒவ்வொரு எண்ணத்திலும் பரமாத்மாவின் சிந்தனை இருக்கிறது, ஆகையால் கவலை யற்றவராக இருக்கிறீர்கள். செய்பவர் செய்வித்துக் கொண்டிருக்கிறார், நீங்கள் நிமித்தமாக (கருவியாக) செய்யக் கூடியவர்களாக இருக்கிறீர்கள். அனைவருடைய உதவி என்ற விரல் இருக்கிறது. ஆகையால் ஒவ்வொரு காரியமும் எளிதாக வெற்றியடைந்து

விடுகிறது. அனைத்துமே சரியாக சென்றுக் கொண்டிருக்கிறது, மேலும் நடைபெறவும் செய்யும். செய்ய வைக்க கூடியவர் செய்துக் கொண்டிருக்கிறார். நாம் நிமித்தமாக இருந்து உடல், மனம், பொருளை பயன்படுத்த வேண்டும். இது தான் கவலையற்ற நம்பிக்கையுடைய மன நிலையாகும்.

சுலோகன்: எப்பொழுதும் திருப்தியை அனுபவம் செய்ய வேண்டுமென்றால், அனைவருடைய ஆசீர்வாதங்களை பெற்றுக் கொண்டேயிருங்கள்.